செ.வெ.எண்: 05/2021 நாள்:03.07.2021

<u>திருப்பூர் மாவட்டம்</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணைக்கினங்க, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு சுற்றுச்சூழல் காலநிலை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் ஆகியோர் சுற்றுச்சூழல் மேம்பாடு குறித்து மாசுக்கட்டுப்பாடு வாரிய அலுவவலர்கள் மற்றும் தொழிற்சாலை சங்க நிர்வாகிகளுடன் ஆய்வு கூட்டம் நடத்தினார்கள்.**

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இஆப, அவர்கள் தலைமையில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர்,திரு.ஏ.வி.வெங்கடாசலம் இவப., அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல் காலநிலை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர்நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் சுற்றுச்சூழல் மேம்பாடு குறித்து மாசுக்கட்டுப்பாடு வாரிய அலுவவலர்கள் மற்றும் தொழிற்சாலை சங்க நிர்வாகிகளுடன் ஆய்வு கூட்டம் இன்று ( 03.07.2021) நடத்தினார்கள்.

***மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் பேசும்போது தெரிவிக்கையில்,***

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணைக்கினங்க,திருப்பூர் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெறுகிறது.மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று 60 நாட்களில் கொரோனா தொற்று தமிழ்நாடு முழுவதும் குறைந்துள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் கடந்த மாதத்தில் நாளொன்றுக்கு கொரோனா தொற்று விகிதம் 2000 என்று இருந்த சூழ்நிலை தற்பொழுது 300க்கு கீழ் என்று குறைந்துள்ளது. அதே போல் கடந்த காலங்களில் அரசு மருத்துவமனைகளில் போதிய அளவில் படுக்கை வசதி,ரெம்டெசிவர் மருந்து தட்டுப்பாடு மற்றும் ஆக்ஸிஜன் தட்டுப்பாடு போன்ற நிலைமைகள் மாறி இன்று அரசு மருத்துவமனைகளில் படுக்கைகள் காலியாகவும், ஆக்ஸிஜன் அளவு நோயாளிகளின் சிகிச்சையின் தேவைக்கு போக உபரியாக உள்ளது. நமது மாவட்டத்திலே பல்வேறு துறைகளை சார்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவர்களுடைய துறைகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்து

வருகின்றனர். மாண்புமிகு சுற்றுச் சுற்றுச்சூழல் காலநிலை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் கடந்த இரண்டு நாட்களாக கொங்கு மண்டலத்தில் துறையின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்து வருகிறார். தொழிற்சாலைகள் அதிகம் நிறைந்துள்ள திருப்பூரில் குறிப்பாக பின்னலாடை நிறுவனங்கள் மூலம் அதிகளவு அந்நியசெலவாணி ஈட்டித்தரக்கூடிய நகரமாக திகழ்ந்து வருகிறது. இதன்மூலம் பல லட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து, அவர்களுடைய பொருளாதாரம் உயர்ந்துள்ளது. சாயக்கழிவு அதிகளவில் வெளியேறி சுற்றுச்சூழல் மாசுபடுவதினால் சாயச்சாலைகளை மூடுவதற்காக உச்சநீதிமன்றம் ஆணைபிறப்பித்தது. இதனை தவிர்ப்பதற்காக மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர் கடந்த 2010 ஆம் ஆண்டு ரூ. 200 கோடி வட்டியில்லா மானியமாகவும் மற்றும் ஒன்றிய அரசு ரூ.100 கோடி என மொத்தம் ரூ.300 வழங்கி பொது சுத்தகரிப்பு நிலையங்கள் அமைத்து சுற்றுச்சுழல் பாதிக்காதவாறு சாயக்கழிவுகளை மறுசுழற்சி செய்து பயன்படுத்தி ஜீரோ டிஸ்சார்ஜ் என்கிற நிலையையடைந்து, திருப்பூர் பின்னலாடை நிறுவனங்களுக்கு ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. அதேபோல் சாயச்சாலைகள் அன்றாடக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்(Sewage Treatment Plant)அமைத்து சுற்றுச்சூழல் மாசுபடுவதை தவிர்க்க வேண்டும். இயற்கை வல்லுநர்கள் மற்றும் வன ஆர்வலர்கள் உலகம் புவி வெப்பமாவதை தடுப்பதற்காக அதிகளவில், அதாவது பூமியின் நிலப்பரப்பில் 33 சதவீதம் மரம் நடவேண்டும் என்று தெரிவித்துள்ளனர். ஆனால் தற்பொழுது 17 சதவீதம் பூமி நிலப்பரப்பில் மட்டுமே மரங்கள் உள்ளது.எனவே அதிகளவில் மரக்கன்றுகள் நட்டு பூமியினை பசுமை நிலப்பரப்பாக மாற்ற நாம் ஒவ்வொருவரும் மரக்கன்றுகளை நட்டு அதனை பராமரித்து எதிர்கால தலைமுறையினருக்கு ஒரு வளமான சமுதாயத்தை உருவாக்கி தர வேண்டுமென மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

***மாண்புமிகு சுற்றுச்சூழல் காலநிலை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் பேசும்போது தெரிவிக்கையில்,***

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, திருப்பூர் மாவட்டமானது தமிழகத்தில் தொழில்துறையில் மிகச்சிறப்பான இடத்தில் முன்னனியில் இருக்கக்கூடிய ஒரு மாவட்டமாக திகழ்கிறது. திரும்பிய திசைகள் எல்லாம் தொழில்துறைக்கான மேம்பாட்டு வசதிகள், அதற்கான திட்டங்கள், அதிலே முதலீடு செய்கின்ற பல்வேறு தொழில் முனைவோர்கள். இவற்றை எல்லாம் கடந்து திருப்பூர் மாவட்டத்தில் மற்ற தொழில்களைச் சார்ந்த விவசாயிகள், வியாபாரிகள், இவற்றிற்க்கெல்லாம் ஒட்டு மொத்தமாக நாம் இந்த மாவட்டத்தில் சுற்றுச்சூழலை

பாதுகாப்பாக எடுத்துச் செல்ல இருக்கிறோம் என்பதற்காக இந்த ஆய்வுக்கூட்டம் நடைபெறுகிறது. கடந்த ஆண்டுகளில் எடுத்து இருக்கின்ற நடவடிக்கைகள் போதுமானதாக இருக்கிறது. குறிப்பாக நாம் இயற்கையை பாதுகாக்கின்ற வேண்டிய முக்கியமான கால கட்டத்தில் இருக்கின்றோம். இந்த 2021 முதல் எதிர்வரும் 2031 வரை பத்தாண்டு காலத்தில் நாம் எடுக்க வேண்டிய மிக மிக முக்கியமான நடவடிக்கைகள் இப்பொழுது நம் கண் முன்னே இருக்கிறது. இந்த பத்தாண்டுகளில் எடுக்க வேண்டிய நடவடிக்கைககள் சரியாக மேற்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதற்கிணங்க இதை மக்கள் இயக்கமாக மாற்றி இந்த சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கின்றது. காரணம் என்னவென்று சொன்னால் இந்த பத்தாண்டுகளுக்கு சுற்றுச்சூழலில் ஏற்படுகின்ற மாற்றத்திற்கு அடிப்படையில் காலநிலை மாற்றத்தில் மிக மிக மோசமான விபரீதமான விளைவுகளை சந்திக்க வேண்டி இருக்கும் என இந்த துறையை சார்ந்த வல்லுநர்கள் நமக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த சுற்றுச்சூழலை பாதுகாக்க மிகுந்த அக்கறையும், கவனமும் எடுத்து இருக்கின்றார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சுற்றுச்சூழலுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொலை நோக்கு திட்டத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்க, சுற்றுச்சூழல் அணியை உருவாக்கினார். மாண்புமிகு தமிழ்நநாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் சில துறைகளில் பெயர் மாற்றங்களை கொண்டு வந்து பெயரிலேயே அதற்கான அர்த்தங்களையும் கொண்டு வந்து இருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை என மாற்றம் கொண்டு வந்திருகிறார். இந்த காலநிலை மாற்றத்தை கண்காணிக்க உலக நாடுகள் பல அரசாங்கங்கள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. ஆனால் மற்ற மாநிலங்களில் பார்க்கின்ற பொழுது மூன்று மாநிலங்கள் மட்டும் தான் இந்த துறைக்கு பெயர் மாற்றம் செய்து அதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மெற்கொள்ளுகிறார்கள்.நொய்யல் ஆறு மற்றும் ஏறி, குளங்கள் கழிவு நீரினால் மாசுபாடுவதை தவிர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். திருப்பூர் சிக்கன்னா அரசு கலைக்கல்லூரியில் 11.2 ஏக்கர் பரப்பளவில் உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு மைதானம் (Synthetic Track) செயற்கை புல்வெளி தளத்துடன் கூடிய ஒடுதளம், ஹாக்கி விளையாட்டு அரங்கம், வாலிபால் போன்ற அனைத்து விளையாட்டுகளுக்கும் பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கும் வகையில் ( gallery) அமைக்கப்படும். அதே போல் திருப்பூர் வடக்கு மாசுக்கட்டுபாட்டு வாரிய அலுவலகத்திற்கு ரூ.3.00 கோடி மதிப்பிலும் மற்றும் திருப்பூர் தெற்கு மாசுக்கட்டுபாட்டு வாரிய அலுவலகத்திற்கு ரூ.2.08 கோடி மதிப்பிலும் கட்டிடம் கட்டப்படுமென மாண்புமிகு சுற்றுச்சூழல் காலநிலை மற்றும்

இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, சமூக நலத்துறையின் சார்பில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்த்தின் மூலம் பெறப்பட்ட மனுக்களின் அடிப்படையில் 5 மகளிருக்கு பயனாளிகளுக்கு தலா ரூ.8,500 மதிப்பில் மொத்தம் ரூ.42,500 மதிப்பிலான தையல் இயந்திரங்களை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு சுற்றுச்சூழல் காலநிலை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

முன்னதாக திருப்பூர் மாவட்டம்,திருப்பூர் தெற்கு வட்டம், முருகம்பாளையம் பொதுக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் குறித்தும் மற்றும் ஜெயவிஷ்னு டெக்ஸ்டைஸில் செயல்பட்டு வரும் சாயக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் குறித்தும், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல் காலநிலை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் ஆகியோர் ஆய்வு செய்தார்கள்.

இந்நிகழ்வின்போது, ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் திரு.அ.கணேசமூர்த்தி, கோவை மண்டல இணைத்தலைமை சுற்றுச்சுழல் பொறியாளர் முனைவர்.பி.அசோகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)திரு.சாகுல்ஹமீது, மாவட்ட சுற்றுச்சுழல் பொறியாளர்கள் திரு.சரவணக்குமார் திருப்பூர் (வடக்கு), திரு.சாமிநாதன் திருப்பூர் (தெற்கு) ஆகியோர் உடனிருந்தனர்

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**